செய்தி வெளியீடு எண்: 324 நாள்: 1.5.2008

# செய்தி வெளியீடு – 1.5.2008

## தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் அமையும் தகவல் தொழில்நுட்ப தொழிற்பூங்காக்களில் 8 தொழில் நிறுவனங்களுக்கு 160 ஏக்கர் நில ஒதுக்கீட்டு ஆணைகள்

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

சென்னை மாநகரப் பகுதிகளில் மட்டுமல்லாமல் தமிழகத்தின் இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில் நுட்பத் தொழிற்பூங்கா அமைக்கும் தமிழக அரசின் கொள்கைப்படி, மதுரை, கோவை, நெல்லை, திருச்சி, சேலம் முதலிய பல்வேறு நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப் படுகின்றன.

மதுரை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய நகரங்களிலும், காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்க நல்லூரிலும், எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் தொழில் நிறுவனங்களை அமைக்க முன்வந்துள்ள புகழ்வாய்ந்த 8 தகவல் தொழில்நுட்பத் தொழில் நிறுவனங்களுக்கு உரிய நிலஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (1.5.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

அதன்படி, எச்.சி.எல். டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு மதுரை இலந்தைகுளம் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 5 ஏக்கர் நிலமும், மதுரை வடபழஞ்சி தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 60 ஏக்கர் நிலமும்,

சதர் லேண்ட் குளோபல் சர்வீசஸ் நிறுவனத்திற்கு மதுரை வடபழஞ்சி தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 5 ஏக்கர் நிலமும், திருச்சி நவல்பட்டு தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 10 ஏக்கர் நிலமும், திருநெல்வேலி கங்கைகொண்டான் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 10 ஏக்கர் நிலமும்,

ஹனிவேல் இண்டர்நேஷனல் இந்தியா நிறுவனத்திற்கு மதுரை இலந்தைகுளம் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 5 ஏக்கர் நிலமும்,

டெசால்வ் சர்வீசஸ் நிறுவனத்திற்கு மதுரை இலந்தைகுளம் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 2.5 ஏக்கர் நிலமும்,

சத்யம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு மதுரை, வடபழஞ்சி தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் 50 ஏக்கர் நிலமும்,

சிபி நிறுவனம், சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ், காக்னிசண்ட் டெக்னாலஜி சொலுயூசன்ஸ் இந்தியா, ஸ்கோப் இன்டர்நேஷனல் ஆகிய நான்கு நிறுவனங்களுக்கும் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவில் மொத்தம் 61.97 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றுக்குரிய நிலஒதுக்கீட்டு ஆணைகள் இன்று வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் டாக்டர் சி. சந்திரமௌலி, இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்ப நிறுவனம் எல்காட் மேலாண்மை இயக்குநர், திரு. உமாசங்கர், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பங்குபெற்றனர்.

* * *

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை